# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஏப்ரல் 2019

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **யூன் 11, 2019**

வெளியிடப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) பெறுமதிகளுக்கமைய, 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 2019 ஏப்ரல் மாதத்திற்கான உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் 0.8% இனால் குறைந்துள்ளதென தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இந்தச் சுட்டெண்ணை வெளியீடு செய்யும் உத்தியோகபூர்வ வெளியீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 ஏப்ரல் மற்றும் 2019 ஏப்ரல் மாதங்களில் முறையே 96.9 மற்றும் 97.7 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கு அரசினைப் போன்று கைத்தொழில் நிறுவனங்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கமைய குறிப்பிட்ட காலப்பகுதிக்கமைவாக தரப்பட்ட காலப்பகுதிக்குள் பொருளாதாரத்தின் கைத்தொழில் துறையின் தன்மையினை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் மூலம் அடையாளம் காணமுடியும்.

2018 ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் உற்பத்தித் தொழிற்துறையின் 20 தொழிற்துறை குழுக்களில் 7 உற்பத்தித் தொழில்துறைகளில் சாதகமான வளர்ச்சியைக் காட்டியுள்ளது.அதனடிப்படையில் தொழிற்துறை குழுக்கள்:’இறப்பர் மற்றும் பிளாஸ்டிக பொருட்கள் உற்பத்தி’,’’பானங்கள்’ மற்றும் அடிப்படை மருந்து உற்பத்தி மற்றும் மருந்து தொடர்பான தாயாரிப்புகளில் முறையே 22.8%,17.3% மற்றும் 16.9% ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி பதிவாகியுள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஏப்ரல் - 2019 | 96.9 |
| ஏப்ரல் - 2018 | 97.7 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) | -0.8 |

உற்பத்திக் கைத்தொழில் துறையில் 13 உற்பத்தித் தொழில்களில் எதிர்மறையான வளர்ச்சியைக் கண்டுள்ளது:’’ ‘பிற உற்பத்திகள்’(மோட்டார் வகனங்கள் மற்றும் டிரெய்லர்கள உற்பத்திகள், பிற போக்குவரத்து உபகரணங்கள் உற்பத்திகள் ,ஆபரணங்கள் உற்பத்திகள்),புகையிலை உற்பத்தி’ மற்றும் ,காகிதம் மற்றும் காகித பொருட்களின் .2018 ஏப்ரல் மாதத்துடன் உற்பத்திகளில் ஒப்பிடுகையில் முறையே 35.9% ,30.9% மற்றும் 24.4% விகித அடிப்படையில் விழ்ச்சி பதிவாகியுள்ளது.அதுமட்டுமன்றி 2019 ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் உணவுப் உற்பத்தி பிரிவில் உற்பத்திகளின் அளவு 9.9% குறைவாக பதிவாகியுள்ளது.2018 ஏப்ரல் மாதத்திலும் இதே விதமாக காணப்பட்டது.ஏனெனில் ஏப்ரல் மாதத்தில் குறைவான வேலை நாட்கள் இருக்கலாம்.

2019 ஆண்டின் ஏப்ரல் மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.